கணபதி துணை.

ஔவையார்

அருளிச்செய்த

ஞான்மூலம்.

[illegible] ஸ்ரீ. க. நினசெ[illegible]யாரவர்களால்

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதி [illegible] ஆவணி

1890

இதன்விலை அணா - க.

ஸ்ரீ கணபதி துணை

நக்கீரதேவநாயனார்

அருளிச்செய்த

கோபப்பிரசாத மூலமும்

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரநாதநம்பிரான் அவர்கள்

தந்த உரையும்.

திருச்சிற்றம்பலம்

தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே
வெண்டிரைக் கருங்கடன் மேற்றுயில் கொள்ளு
மண்ட வாணனுக் காழியன் றருளியு
முலக மூன்று பொருந்துடன் படைத்த
மலரோன் றன்னை வான்சிர மரிந்துங்
கான வேடுவன் கண்பறித் தப்ப
வான நாடு மற்றவற் கருளியுங்
கடிபடு பூங்கணைக் காம னுடல்
பொடிபட விழித்தும் புகலத் திசைந்த
மாணுட னாகிய சண்டியை

வானவ னாக்கியு
மறிகட லுலகின் மன்னுயிர் கவருங்
கூற்றுவன் றனர்கோர கூற்றுவ னாக்கியுங்
சடல்படு நஞசம கண்டத தடககியும
பருவரை சிலையாப பாநத ணாணாக்
திரிபுர மெரிய வொருசலை துரந்துங்
கறகொண் டெழுநத சாககிய னன்பு
தற்கொண் புன்னா டானமிக வளித்துங்
கூறறெனத தோன்றியுங சோமரி போன்றுந
தோறறிய வாரணத துரி போரத்து
நெறறிக் கண்ணுற நமபுய நான்கு
நற்று நநதீச னவரற் கருளியு
மறிவினை யோரா வரககனுட
னெறநெற விறுதர வொருவிர லூன்றியுந
திருவுரு வத்தொடு செஙக ணேறு
மரியன திண்டிற லசுரனுக் கருளியும
பல்கதி ருரவோன் பற்கெடப் பாய்ந்து
மல்குபிருங கிருடிக்கு மாவர மீந்துந
தக்கன் வேள்வி தகைகெடச் சிதைத்து
மிக்கவா நத்திமா காளர்க் கருளியுஞ்
செந்தீக் கடவுடன் கரதலஞ் செற்றும்

பைந்தார் நெடும்படை பார்த்தற் கருளியுங்
கதிர்மதி தன்னையோர் காற்பயன் கெடுத்து
நிதிபயில் குபேரற்கு நீணக ரீந்துஞ்
சலந்தர னுடலந் தான்மிகத் தடிந்து
மறைபயின் மார்க்கண் டேயனுக் கருளியுந்
தாரகற் கொல்லமுன் காளியைப் படைத்துஞ்
சீர்மலி சிலாதிக் கின்னா சளித்துங்
கார்மலி யுருவக் கருடனைக் காய்ந்து
மாலின் கீழிருந் தறநெறி யருளியு
மின்னவை பிறவு மெங்க ளீசன்
கோபப பிரசாதங் கூறுங் காலைக்
கடிமல ரிருந்தோன் கார்க்கடற் கிடந்தோன்
புடமுறு சோலைப் பொன்னகர் காப்போ
னுரைப்போ ராகினு மொண்கடன் மாநீ
ரங்கைகொண் டிறைக்கு மாதன் போன்றுள
ரொடுங்காப் பெருமை யும்பர் கோனை
யடங்கா வைம்புலத் தறிவில் சிந்தைக்
கிருமி நாவாற் கிளத்தும் பரமே யதாஅன்
றொருவகைத் தேவரு மிருவகைத் திறமு
மூவகைக் குணமு நால்வகை வேதமு
மைவகைப் பூதமு மறுவகை யிரதமு

மெழுவகை யோகமு மெண்வகை ஞானமு
மொன்பதின் வகையு மொண்மைச் சிறப்பும்
பத்தின் வகையு மாகிய பரமனை
பின்பனி நீங்கோர்ந் தென்னிடை யமுதினைச்
செம்பொனை மணியினைத் தேனினைப் பாலினைத்
கஞ்சமென் மலருறை யன்னமு மார்க
னெஞ்சம் பிரியா பேரா நிதியர்
செங்கதிர்ப் பவள மேனி யுடையனை
முக்கட் செல்வனை முதலொரு வித்தியைக்
கள்ள மனத்திற் கெய்யா நாதனைக்
கலந்து கசிந்துகண் கலுழ்ந்திடு மடியவ
ரினைந்திட வாங்கே தோன்று மப்பனைத்
தேவ தேவனைத் திகழ்சிவ லோகனைப்
பாவ நாசனைப் படரொளி யுருவனை
வேயார் தோளி மெல்லியல் கூறனைத்
தாயாய் மன்னுயிர் தாங்குந் தந்தையைச்
சொல்லும் பொருளு மாகிய சோதியைக்
கல்லுங் கடலு மாகிய கண்டனைத்
தோற்ற நிலையி றாகிய தொன்மையை
நீற்றிடைத் திகழு நித்தனை முத்தனை
வாக்கு மனமு மிறந்த மறையனைப்

பூக்கமழ் சடையனைப் புண்ணிய நாதனை
யினைய தன்மைய னென்றறி வரியவன்
றனைமுன் விட்டுத் தாமற் றினைப்போர
மாமுயல் விட்டுக்
காக்கை பின்போங் கலவர் போலவும்
விளக்கங் கிருப்ப மின்மினி கவர்ந்து
மனைபுகு [illegible] போலவுங்
கச்சங் கொண்டு கடுந்தொழின் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென் றெண்ணிப்
பிச்சரைப் போலவே
ராரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று
வட்டணை போகவர் மானுடம் போன்று
பெட்டினை யுரைப்போர் பேதையர் சிலத்
துன்றலை பின்றலை யெண்பல வென்றுல தனை
பறுத்து திருப்போ ரொருத்த ரின்மையின்
மத்திர மாகுவா மாநெறி கிடப்பவோர்
சித்திரம் பேசுவர் தேவராகி [றறிய
வின்னோர்க் காய்ந்தன ரின்னோர்க் கருளின ரென்
வுலகின் முன்னே யுரைப்ப தில்லை யாகிலு
மாடு போலக் கூடிநின் றழைத்து
மாக்கள் போல வேட்கை யீடுண்டு

மிப்படி ஞான மப்படி யமைத்து
மின்ன தன்மைய னென்றிரு நிலத்து
முன்னே யறியா மூர்க்க மாக்களை
யின்னே கொண் டேகாக் கூற்றந்
தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே.

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

கோபப்பிரசாத உரை,

வணக்கம்.

தன்றேன் முகத்துச் சடையிற் பிறையணி
குன்றே யேற்குங் கூழையே னுரையே.

மூன் உரை.

கோபப்பிரசாதம் என்னும் பிரபந்தம் (கூகூ) அடியினுள் (ரு௰க) சீரமைந்த இணைக்குறளா சிரி

யப்பா ஒன்றே. அது பதினொராந் திருமுறையுள் நிலவுகின்றது. அதற்கு உரைகாணற்குப் போதிய அறிவாற்றல் சிறிதுமிலனேனுடை, நுண்மாண் நுழைபுலமுடையார்க்கு ஓர் ஆராய்ச்சித் துணையாகவும் விழைந்து பிழைபட வுரைப்போர்க்கு ஓர் மறுப்பு விளக்கமாகவும் என்னறிவு சென்றளவில், மூத்தநாயனார் அருள் கொண்டு உரைத்தேன். கோபம் பிரசாதம் என்பன இறைவனது கோபச்செயலும் அநுக்கிரகச் செயலுமாம். கோபந்தானும் பிரசாதமேயெனத் தெளியவும் நின்றது. கோபம அதனாற் செய்யப்படும் தண்டத்தை யுணர்த்திற்று. இவ்விரண்டும் முறையே மறக்கருணை அறக்கருணை எனப்படும்.

கோபப்பிரசாத உரை.

1. பெரிது தவறு உடைத்து பெரிது தவறு உடைத்து என்றது.—பெரிதும் பிழையுடையது பெரிதும் பிழையுடையது என்பதாம். இத்துணைக்கோபத்தோடும் கூறுவதனால் அஃதியாதெனத் தெளிய வெஃகினேன் என்பையேல், யாமுரைப்பதைக் கடைபோக நூனெறியே ஒற்றித்துக்கேட்டுத் தெளியக் கடவாய். கோபத்தின் மிகுதிபற்றி அடுக்கிவந்தது.

2, வெள்திரை கருமகடல் மேல் துயில்கொள் அண்டவாணனுக்கு ஆழி அன்று அருளியும் எ-து. —வெள்ளிய அலைகளைச்செய்யும் பெரிய பாற்கடற் பரப்பின்மேலே பாம்பணைப்பாயலில் உறக்கங்கொள் வனேனும் மேலண்டத்துள்ள வைகுண்டவாழ்க்கை கொண்ட திருநெடுமாலுக்குச் சக்கரப்படையை அக் காலத்திற் கொடுத்தருளியும் எ-ம். திருநெடுமால் ஆயிரந்தாமரை மலர்களால் அருச்சிக்கும் விரதம் பூண்டு, அங்ஙனம் பூசிக்கின்றுழி, ஒருதினம் ஒரு மலர் குறையக்கண்டு அதை நிரப்பிக்கொள்ளத் தன் கண்ணொன்றினைப் பறித்துச் சாத்துதலும், சிவபெரு மான் தாம் முன்னர்ச் சலந்தரனைக்கொன்ற சக்க ரத்தை அத்திருநெடுமால் விரும்பிய வண்ணமே கொடுக்க ஏற்று அதனைத்தாங்கும் வலி தனக்கின் மையை விண்ணப்பித்துக்கொள்ள, உடனே பெண் பாகர் அச்சக்கரத்தைத் தமது நகநுனியால்வகிர்ந்து வட்டித்துக் கொடுத்தருளினர் என்பது சரித்திரம்.

3. உலகம் மூன்றும் ஒருங்கு உடன்படைத்த மலரோன்தன்னை வான்சிரம் அரிந்தும் எ-து.—மேல் கீழ் நடு வென்னும் உலகம் மூன்றினையும் ஒரேமுறை யிற்றானே படைத்த தாமரை வாழ்க்கையோனாகிய

பிரமதேவனை அவன் ஐந்தலைகளில் உச்சித்தலையை நகநுனியாற்கொய்து அகந்தை அடங்கத் தண்டித்தும எ-ம்.

4. கானவேடுவன் கண்பறிந்து அப்ப மற்று அவற்கு வானநாடு அருளியும் எ-து.—காட்டுவேடுவராகிய திண்ணனார் தமது கண்ணை இரக்க மீக்கொண்டு காளத்திக் கண்ணப்பனார் கண்ணினின்றும் பெருகுங் குருதி தடைப்படுமாறு அப்புதலும, அவ்வருஞ்செயல் புரிந்த கண்ணப்பநாயனாருக்கு முத்தியுலகந் தந்தருளியும் எ-ம்.

5. கடிபடு பூ கணை காமனார் உடல் பொடிபட விழித்தும் எ-து.—மணம்பொருந்திய ஐம்மலர்களாகிய அம்பினையுடைய மன்மதனாருடலம் நீறுபட்டொழிய நுதற்கண் விழித்துத் தண்டித்தும் எ-ம்.—[ஐம்மலர்களாவன—அசோகு மா முல்லை தாமரை நெய்தற் பூக்களாம்.]

6. பூதலத்து இசைந்த மானுடன் ஆகிய சண்டியை வானவன் ஆக்கியும் எ-து.—நிலமிசையே பிறவியிற் பொருந்திய மானுடவடிவினராகிய சண்டேசுரநாயனாரை அவ்வடிவுடனே தேவர்கள் வணங்

கும் பெருந்தேவனாக அநுக்கிரகம் புரிந்தும் எ-ம்.

7. மறிகடல் உலகின் மன் உயிர் கவரும் கூற்றுவன் தனக்கு ஓர் கூற்றுவன் ஆகியும் எ-து.—திரைகள் மறியும் கடல்சூழ்ந்த நிலத்தின் கணுள்ள உயிர்களைப்பற்றிச் செல்லும் இயமனுக்குத்தாம் மற்றோர் யமனாகித் தண்டித்தும் எ-ம்.

8. கடல்படு நஞ்சம் கண்டத்து அடக்கியும் எ-து.—பாற்கடலி லுண்டாகிய காளகூடவிடத்தை தேவர்களைக் காத்தற்பொருட்டுத் தமது திருக்கண்டத்தில் அடக்கியருளியும். எ-ம்.

9. பருவரை சிலையாப் பாந்தள் நாண் ஆ திரிபுரம் எரியஒருகணை துரந்தும் எ-து.—மகாமேரு மலையே வில்லாகவும்வாசுகி என்னும் பாம்பே நாணாகவும் கொண்டு மூவிடங்களின மாறிமாறித்திரியும் மும்மதில்களும் எரியும்படி ஒரே பாணத்தைச் செலுத்தி அம்முப்புரவாசிகளைத் தண்டித்தும் எ-ம்.

இரும்பு வெள்ளி பொன் என்னும் மூன்றனும் இயைந்த மூன்றுகோட்டைகளும் தாருகாக்கன் கமலாக்கன் வித்தியுன்மாலி என்னும் அவற்றி னதிபர்கள் விரும்பியாங்கே தனித்தனி மேல் கீழ் நடு உலகங்க

ளில் மாறிமாறிப் பறந்துசென்று வைகுண்டமாதி வைப்புகளைப் பாழ்படுத்துங்கால், வாசுதேவன் முத லிய தேவர்கள் சிவசன்னிதியை அடைந்து ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தியின் மந்திர செப தியானங்களாற் பிரார்த் தித்த வழி, சிவபெருமான் மகாமேருவை வில்லாக வும், வாசுகியை நாணுகவும், அங்கி நுதியும் அரி அதன் முக்கோணவடிவும் காற்று காம்புவடிவுமாகப் பொருந்திய அம்பாகவும் எடுத்துக்கொண்டு, பூமியா கிய இரதத்தில் ஆரோகணித்துச்சென்று அந்தமூன்று கோட்டைகளையும் ஒரிடமாக்கித் திருப்புன்னகை யால் எரித்தார். அப்பொழுது அவ்வில்லிற் கோத்த அம்புருவாயிருந்த தேவர்கள் தமக்கு யாதும் பயன் கிடைத்திலவே யென வருந்த, அஃதறிந்த பரமபதி அவர்களுக்குந் தோல்வியுருவண்ணம் செலுத்தினூர் என்பது சரித்திரசாரம்.

"கல்லானிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்வாயெரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழ லையே."

என்னுந் தேவாரமு மிதனை வற்புறுத்தும்.

10. கல்கொண்டு எறிந்தசாக்கியன் அன்புகற் கொண்டு இன்அருள்தான் மிக அளித்தும் எ-து.—செங்கற்களைக் கொண்டெறிதலே திருத்தொண்டாகச்செய்த சாக்கிய நாயனாரது இடையறாப் பேரன்பினைத் தாம் கைக்கொண்டு இனியபேரருளை அவருக்குப் பெரிதும் கொடுத்தருளியும் எ-ம்.

11 கூற்று எனத்தோன்றியும் கோளரி போன்றும் தோற்றிய வாரணத்து ஈருரி போர்த்தும் எ-து.—கருநிறங்கொண்ட கோபத்தானே இயமனே எனும்படி யாகாக்கினியினின்று வெளிவந்தும் அணைந்து புழைக்கரத்தை ஏற்றிவந்ததலானே யாளியை ஒக்கும் எதிரேவந்த யானையினது பருத்ததோலை உரித்துப் போர்வையிட்டுக் கிருத்திவாசராய் அதனைத் தண்டித்தும் எ-ம்.

12. நெற்றியிற் கண்ணும் நீள்புயம் நான்கும் நற்று நந்தீச்சுவரர்க்கு அருளியும் எ-து.—நெற்றியிலே கண்ணையும் நீண்ட நான்கு கரங்களையும் தம்மைப்போல நன்றாக நிலைபெறும்படி திருநந்தி தேவருக்குக் கொடுத்தருளியும் எ-ம்.

13. அறிவினை ஓரா அரக்கனார் உடல்நெறநெற இறுதர ஒருவிரல் ஊன்றியும் எ-து.—பலவாற்றானும்

ஆராயநதறிநதே [illegible] தொழிற [illegible] ததை
அ [illegible] ஆராய [illegible] ருத [illegible] மலையைப்
பெயாக [illegible]
[illegible]
தொழிபு [illegible]
யால [illegible] -ம

14. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

15 [illegible] பாயந்தும
எ-து [illegible]
[illegible]
எ-ம.

16 [illegible] இருந்து மாவரம [illegible]
எ-து சிவஞானம நைறந்த பிருங்கிமாவிருடிக்குப்
பெருவரததைதக கொடுததருளியும எ-ம.

17 தக்கன் வேள்வி தகைகெடச் சிதைத்துட

* இசசரிததிரமறிநதா ருதவினனரும

ஞானத்தைப் போதித்தருளியும எ-ம்

29. கூறுங்காலை இன்னவை பிறவும் எங்கள் ஈசன் கோபப்பிரசாதம எ-து — ஆராய்ந்து சொல்லு மிடத்து இவையும் இவைபோல்வன பிறவுமாகச் செய்தருளியவெல்லாம் எமது தலைவராகிய சிவபிரானரது தண்டமும அநுக்கிரகமுமாகும எ-ம்

30 கடிமலர் இருந்தோன் கார்க்கடல் கிடந்தோன் புடம் உறு சோலைப்பொன் நகர் காப்போன் உரைப்போர் எ-து. மணநாறும் மரைமிசையிருந்தோனாகிய பிரமதேவனையும் மேகங்கள் பருகும் பாற்கடற்கண்ணே படுக்கையிற் கிடந்தோனாகிய திருநெடுமாலையும் இலைப்பொறையான் வளைந்த கற்பகச் சோலை நீழலிலிருந்து தேவலோகத்தைக் காப்பவனாகிய இந்திரனையும தனித்தனியே முதல் என்பார் நம் எம்பிரானொடும் எண்ணிச் சமத்துவமுடையரென்ப பாரும் மற்றும் பல பிதற்றுவோரும் எ-ம்.

31. ஆகினும் எ-து. மதத்தினரெனப்படுவாரானும் எ-ம்.

32. ஒண்கடல் மாநீர் அங்கை கொண்டு இறைக்கும் ஆதன்போன்றுளர் எ-து. இவரெல்லாம் ஒள்

ளிய கடற் பெருநீரை உள்ளங் கையைக்கொண்டு இறைத்திடர்ப்படும் அறிவற்ற குருடனைப் போன்றவராவார் எ-ம்.

33 ஒடுங்காப்பெருமை உம்பர்கோனை அடங்கா ஐம்புலத்து அறிவு இல் சிறுதைக் கிருமி நாவால் கிளத்தும் பரமே எ-து. அளவைகளானும் வேதமாகிய முதனூலினாலும் அளந்தறிய அடங்காத பெருமையினையுடைய மகாதேவனைத் தம்வயப்படாத ஐந்திந்திரியங்களாலும் சடமாகிய மனசினாலும் புழுத்தநாவினாலும் அங்ஙனம சமத்துவமுடையரெனச் சொல்லுந் தன்மைத்தோ. எ-ம்.

34. அசாஅ அன்று எ-து. அதுவன்றியும் எ-ம். இதுகாறும புராணவசனம் பற்றிக்கூறி மேல் வேதவசனம்பற்றிக் கூறுகின்றார்.

35. ஒருவகைத் தேவரும் எ-து--தொகுதியான் ஒருவகைப் பட்டதேவரும் எ-ம்

36. இருவகைத் திறமும் எ-து.—ஆண் பெண் என்னும் இருவகையாற் பலதிறமும் எ-ம்.

37. மூவகைக்குணமும் எ-து—சத்துவ ராசத தாமத மென்னும் மூவகைக்குணமும் எ-ம்.

38 நால்வகை வேதமும் எ-து—இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நான்குவகைவேதமும் எ-ம்.

39. ஐவகைப் பூதமும் எ-து—பிருதுவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்துவகைத்தாய பூதமும் எ-ம்.

40. அறுவகை இரதமும் எ-து—இனித்தல் புளித்தல் கார்த்தல் கைத்தல் உவர்த்தல் துவர்த்தல் என்னும் அறுவகை இரதமும் எ-ம்.

41. எழுவகை ஓசையும் எ-து—ச. ரி. க. ம. ப. த. நி. என்னும் எழுவகையான ஓசையும் எ-ம்.

42. எண்வகை ஞானமும் எ-து—மெய்வாய் கண்மூக்குசெவி என்னும் ஐந்து ஞானேந்திரியமும், அகங்காரம் சித்தம் புத்தி என்னும் மூன்றுகரணமுமாகிய எட்டுவகை ஞானமும் எ-ம்.

43. ஒன்பதின் வகையும் ஒண்மலர்ச் சிறப்பும் எ-து—பிரகிருதியின் வகையும், அவ்வகைகளிற் பரிணமித்து விரிந்த தாத்துவிகவகைச் சிறப்பும் எ-ம். ஒன்பது என்றது ஈண்டுப் பிரகிருதியை.

44. பத்தின் வகையும் ஆகிய பரமனை எ-து—அவைடனைத்தையும் போக்கியமாகக் கொள்ளும் புரு

டன்வகையுமாகிய பரமசிவனை எ-ம். பத்து என்றது ஈண்டுப் புருடனை அகரவுயிர் ஏனையுயிரையும் மெய்யையும் இயக்கற்கண் அவையே யானவாறு இவை பலவுந்தாமேயான பரமசிவனை என்றுணர்க. எண்கள் குறிப்புச் சொற்களின் பாலன. இதுகாறும் வேதவசனம் பற்றிக்கூறி மேற்சிவாகம வசனம் பற்றிக்கூறுகின்றார்.

45. நினைவோர்க்கு இன்பனை எ-து—நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் மறவாதே நினைக்கும் சகச நிட்டைத் தொண்டருக்கு இன்பமேயா யிருப்பவரை எ-ம்.

46. என்னிடை அமுதினை எ-து—அங்ஙனமே அநுபவிக்கும் என்னிடத்தும் அமிர்தமாகத் தித்திப்பவரை எ-ம்.

47. செம்பொனை மணியினை எ-து—அத்தகைய சுவாநுபவத்திலே செம்பொன்னையும் மணியையும் போலக் களங்கமற விளங்குபவரை எ-ம்.

48. தேனினைப் பாலினை எ-து—தேனையும் பாலையும் போலச் சுவைப்பவரை எ-ம்.

49 தஞ்சம் என்று ஒழுகும் தன் அடியார் தம் நெஞ்சம் பிரியா நிமலனை எ-து—நின்னலாற் பற்று மற்றொன்றிலோம் நீயே தஞ்சமென்று சரியையாதி நாற்பாதவகையினின்று ஒழுகும் தமது மெய்யடியார்களது நெஞ்சத்தை விட்டகலாத நின்மலனை எ-ம.

50. நீடு உயர் செந்தழல் பவளச்சேண் உறு வரையனை எ-து மிகவோங்கிய செந்தழன்மலைபோலவும் பவளமலைபோலவும் அடிமுடி காண்டற்கரிய அதிதூரமான எல்லையையுடையவரை எ-ம. எல்லையில்லாதவரென்றபடி.

51. முக்கண் செல்வனை எ-து—அங்ஙனந் தூரத்தினராயினும் உயிர்கட்கு அணியராயுபகரிக்குமாறு மிளிரும் மூன்று கண்களை உடைமையாயுடையவரை எ-ம். முக்கண் சூரிய சோமாக்கினி என்பன.

52. முதல்வனை எ-து—கற்பனைகடந்த சோதியாகிய முதற்பொருளாயுள்ளவரை எ-ம்.

53. மூர்த்தியை எ-து—அந்தச சோதிதானே அடியவர்கள் வழிபடுமாறு வடிவமாயினவரை எ-ம்.

54. கள்ளம் கைவிட்டு உள்ளம் அது உருகிக் கலந்து கசிந்து தன்கழல் இணை அதுவே நினைந்திட

ஆங்கேகோன்றும் நிமலனை எ-து.—அவ்வழிபாடு செய்கிற பயனையாறு,—உண்டு போலின்றும் பண்பினாகிய பிரபஞ்சத்தை அறவேவிட்டு ஆண்டு நான் பிரமமென முனையாது உயிர் தானே அனலிற்பட்ட மெழுகுபோலுருகி அங்கே வெளிப்படும் அருளிலே அப்பினுடைய உப்பே போலக் கலந்து அக்கலப்பாலே விளங்கும் சிவசாட்டுணத்தைத் தன் குணமாகக் கொள்ளாது அவ்வாறு நெருப்பிலிட்ட வெண்ணெய் போலக் கசிந்து தமது வியாபகமாகிய திருவடிகளிரண்டையுமே தியானித்தலாகிய சிவோகம்பாவனையிலுறைத்து நிற்கும் அவ்விடத்தே பரமானந்தப் பெரும்பயனாய் விளங்கும் மலரகிதரை எ-ம.

55. தேவதேவனை எ-து.—தேவரெனப்படுவார்க்கெல்லாம் பெருந்தேவனை எ-ம.

56. திகழ்சிவலோகனை எ-து--அங்ஙனம் வியாபிய பெருந்தேவராயினும் அத்தேவர்கள் வழிபட்டுய்யும்படி விளங்கும் சிவலோகத்தைத் தமதிட்டமாகவுடையவரை எ-ம.

57. பாவநாசனை. எ-து.—அவர் தம் பாவம் போக்கலாலே அரன் உருத்திரனாதி நாமங்களை உடையவரை எ-ம.

58. படர் ஒளி உருவனை எ-து.—அந்நாமங்கட் கேற்பப் பரவிய ஞானத்தையே திருமேனியாக உடையவரை எ-ம்.

59. வேயார் தோளி மெல் இயல் கூறனை எ-து.—அங்ஙனம் அரன் உருத்திரனாகிச் சங்கரிப்பவ ரேனும் மீட்டுந் தோற்றுவிக்கும் மூங்கிலையொத்த தோளினையுடைய மெல்லிய வியல்பினையுடைய கருணா சத்தியைப் பாகமாகவுடையவரை எ-ம்.

60. தாயாய் மன் உயிர் தாங்கும் தந்தையை- எ-து. அதற்கேற்பத் தாயாகி எவ்வுயிரையுங் காக் கும் பரம பிதாவானவரை. எ-ம்.

61. சொல்லும் பொருளும் ஆகிய சோதியை எ-து—அதனானே சொல்லும் பொருளும் போல அந்தச் சத்தியுந்தாமும் பேதாபேதமாக விளங்கு பவரை எ-ம்.

62. கல்லும் கடலும்ஆகி அகண்டனை எ-து— அந்தச்சத்தியானே அவ்வுயிர்கள் போகந்துய்க்கு மாறு மலையும் (நிலனும்) கடலுமாகி மறைத்து வியா பிக்கின்றவரை எ-ம்.—

63. தோற்றம் நிலை ஈறு ஆகிய தொன்மையை- எ-து—இங்ஙனமே சிருட்டி திதி சங்காரம் திரோ

தானம் அநுக்கிரகமாகிய அறுதி ஐந்தொழிலு முடையவரை எ-ம்.

64. நீற்றிடைத்திகழும் நித்தனே எ-து—அவ் வைந்தொழிலுமுடைமையானே விகாரியாகாது அச் சராசரமனைத்தையும் தம்மிடத்தொடுக்கிய விபூதி யிடத்தே விளங்கும் அறுதி நித்தியரை எ-ம்.

65. முத்தனே எ-து—அங்ஙனமாயினும் அவற் றின் விருப்பு வெறுப்பற்ற அறுதி மலமுத்தரை எ-ம்.

66. வாக்கும் மனமும் இறந்த மறையனே எ-து—அதனானே பாசஞான பசுஞானங்களைக் கட ந்த அநாதி போதராயுள்ள வரை எ-ம். மறை ஈண் டறிவின்மேற்று.

67. பூக்கமழ் சடையனே எ-து—அவ்விருஞா னத்தானும் அறியவாராராயினும் சிவஞானத்தானே யறியுமபடி மலர்மணங்கமழும் சடைமுடியாகிய அள விலாற்றலுடையவரை எ-ம்.

68. புண்ணியநாதனே எ-து — இக்குணமெலா முணர்ந்து வழிபடும் புண்ணியத்திற்குப் பயனாக வுள்ள தலைவரை எ-ம்.

69. இனைய தன்மையன் என்று அறிவரியவன் தனை எ-து—அங்ஙனம் வழிபடுவதேயன்றி இப்படியன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்ட முடியாமையின் அறிதற்கரியவரை எ-ம்.

70. முன் விட்டுத் தாம் மற்று நினைப்போர் எ-து—இங்ஙனம் முறையே புராணம் வேதம் ஆகமங்கள் தெரிக்கவும் அச்சிவமுதலையே முதலாகக் கொள்ளுதலைவிட்டுத் தாங்களாகப் பிறிதொன்றனை முதலாக உன்னுந தீயூழாளர் எ-ம்.

71. மாமுயல் விட்டுக்காக்கை பின்போம் கலவர்போலவும் எ-து—பெருமுயலைப் பற்றுதலைவிட்டுக் காக்கையைப் பற்றும்படி பின்றொடர்ந்து செல்லும் வேட்டுவ வீரர் போலவும் எ-ம்.

72. விளக்கு அங்கிருப்ப மின்மினி கவரும் அரும் அளப்பு சிறப்பு இல் ஆதர் போலவும். எ-து.--வாடா விளக்குத் தமதில்லின் கண்ணே இருக்கவும் பிரகாசத்தை விரும்பி மின்மினியைப் பிடித்து வரும் அரிய அளவைச் சிறப்பாகிய அறிவுக் கண்ணில்லாத குருடரைப் போலவும் எ-ம்.—இவ்விரண் டுவமைகளும் முறையே உடையானல்லானை யுடையானாகக் கோடற்கும் உடங்கே சிவஞான மிருந்துணர்த்துவ

துணராது பசுஞானத்தையே தேடுதற்குவமையா யின.

73. கச்சம் கொண்டு கடுந்தொழின் முடியாக் கொச்சைத் தேவரைத் தேவர் என்று எண்ணி எ-து.—துணிவுகொண்டு அரியதொரு கோபத்தை யேனும் பிரசாதத்தை யேனும் செய்ய முடியாத கீழ்மையினையுடைய ஏனைத்தேவர்களை முதற் கடவுள ராகக் கருதி எ-ம்.

74. பிசாசரைப் போல ஓர் ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று எ-து.—அக்கருத்தை நிரப்புமாறு பித்தேறினர்கள் உழறுவதுபோல உயர் வாகியதொரு வேதத்தின் உட்பொருளை அறியாது பேய்போல ஆவேசங்கொண்டு பிதற்றிப் பிதற்றி எ-ம். பித்தேறினோர்கள் முன்னொடுபின்முரணிக் கூறற்கும்; பேய் இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும நாற்பகுப்பில் இருக்கின் பிரிவாய இருபத் தொருசாகையினும் எசுரின் பிரிவாய நூற்றொரு சாகையினும் சாமத்தின் பிரிவாய ஆயிரஞ் சாகை யினும் அதர்வத்தின் பிரிவாய ஒன்பது சாகையினும் தாம் தாம் பற்றியதையே மலைந்து பொருள்கொண்டு நிற்றற்கும் உவமையாயின.

75. வட்டணை பேசுவர் எ-து.—தருக்கவுணர்வு கைவந்தவர் போல வளைய வளையச் சுட்க தர்க்கம் பேசுவர் எ-ம்.

76. மானுடம் போன்று பெட்டினை உரைப்போர் எ-து—அறிவின் மதுகையின்மையானே கிளுகிளுத்த மரம்பழுத்த மானுடப்பழம்போலும் மனிதராய்த் தமது விருப்பத்தையே இங்ஙனம் பேசித் திரியுமிவர் எ-ம.

77 பேதையர் எ-து—அறிவறைபோய ஏழையராவார் எ-ம்.

78. நிலத்து உன்தலை மீன்தலை எண்பலம் என்றால் அதனை அறுத்து நிறப்போர் ஒருத்தர் இன்மையின் மத்திரம் ஆகுவர் எ-து. இத்தரையின் கண்ணே ஒருவன் மற்றொருவனைப் பார்த்து உனது தலை மீனினது தலையாயிருக்கின்றது நிறையும் எட்டுப்பல முளதென்றால் அங்ஙனமே அதனை அறுத்து நிறை செய்வோர் ஒருவருமின்மையானே அவ்வளவிற்றமக்கே மீன்றலை வாய்த்ததெனை மகிழாநிற்பர் எ-ம். இது கருதப்பட்ட பொருளை மறைத்து அதனைப் புலப்படுத்தும் அதுபோன்ற பிறிதொன்றினைக் கூறியதனானே ஒட்டென்னும் அணி. கருதப்பட்ட பொருள் இத்தரை

பின் கண்ணே போலி ஆசாரெருவன் அப்பேதையர் தம்மைப் பார்த்து உனது ஞானம் பிரமத்தினது ஞானமாயிருக்கின்றது அது சச்சிதானந்தமா மென்றால் அங்ஙனமே அதனை அறிந்து சொல்வோர் பிறர் ஒருவருமின்மையானே அவ்வளவிற்றமக்கே பிரமத் தன்மை வாய்த்ததென மகிழ்கிற்பர் எ-ம்.

79. மாநெறி கிடப்ப ஓர் சித்திரம் பேசுவர் எ-து—அம்மட்டோ! இன்னும் அவர் சத்தியவாதமாம் சைவத்திருநெறி யொன்றிருக்கவும் மெய்போலப் பொய்வாதத்தையும் புகலாநிற்பர் எ-ட

80. தேவராகில் இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க்கு அருளினர் என்று அறிய உலகின் முன்னே உரைப்பது இல்லை எ-து—அவர், தாம்கொண்ட தேவரும் முதற்றேவராமாயின், அத்தேவர் இன்னரைத் தண்டித்தார் இன்னருக்கு அநுக்கிரகித்தார் என்று எல்லாரும் அறியும்படி உலகத்தின் முன்னிலையில் எடுத்துச் சொல்வதுமே இல்லை எ-ம்.

81. ஆகிலும் எ-து-அங்ஙனமாயினும் நீற்றொடு சாதனம் பூண்டவராய் எ-ம்.

82. ஆடுபோலக் கூடிநின்று அழைத்தும் எ-து. —ஆடுகள்கத்துவதுபோலக் கூட்டங்கூடி நின்று திருவுருத்திரத்தைக் கொண்டு மேமே என்று அழைத்தும் எ-ம். மேமே என்ச் சமகத்தின் வருவதறிக.

83. மாக்கள் போல வேட்கை மண்டும் எ-று
—அங்ஙனந் திருவருத்திரஞ் சொல்லும பொழுதும் மிருகங்களைப் போல ஆசை வசப்பட்டும் எ-ம்.

84. இப்படி ஞானம அப்படி அமைக்தும் எ-று
—இந்தப் பூமியிலே அவவுருத்திரத்தின் உணர்ச்சிப் பொருளை அவ்வணணமே உணரும்படி ஆலயமாக அமைத்து வைததிருக்கவும் எ-ம

85. இருநிலத்தூ இன்ன தன்மையன் என்று முன்னே அறியாமூாக்கி மாககளை எ-து.—அவ்வால யங்கள் பல நிறைந்த இந்த நிலவுலகத்திலே இன்ன தன்மையன் அவவருகதிராதனுகிய பரசிவன் என்று முன்னர்த்தானே அறிந்துகொளளாத மூட மனிதரை. எ-ம்.

86. இன்னே கொணடு ஏராக்கூற்றம் பெரிது தவறு உடைத்து பெரிது தவறு உடைத்து எ-து.—இப்பொழுதே பாசகதாற் கட்டிக்கொண்டு செல்லாத கூற்றமானது பெரிதும பிழையுடைத்து பெரிதும் பிழையுடைத்து எ-ம

ஈண்டு அப்பிழை நிச்சயமென்பதுணர அடுக்கி வந்தது..

கோபப்பிரசாத வுரை

முற்றிற்று.

மெய்கண்ட தேவன் திருவடி வாழ்க.